# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 8, 2025

Weekly E-paper ● December 8, 2025





# திராவிட இயக்கத் தமிழர் பேரவை கண்டன ஆர்ப்பாட்டம்!

## குன்றம் தவறான தீர்ப்பு! பதவி விலக்குக!

**முயன்றார்கள் காவிகள், முடித்துவைத்தார் முதலமைச்சர்!**

எழில்.இளங்கோவன்

**தலைதூக்கும் சர்வாதிகாரம்**

தலையங்கம்

**"மொழியால் தமிழர்கள் இனத்தால் திராவிடர்கள்"**

துணைமுதல்வர் உதயநிதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 8, 2025

Weekly E-paper ● December 8, 2025


## திராவிட இயக்கத் தமிழர் பேரவை கண்டன ஆர்ப்பாட்டம்!

## குன்றம் தவறான தீர்ப்பு! பதவி விலக்குக!




2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், திருப்பரங்குன்றம் அருகே தோப்பூர் என்னும் இடத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்டிடத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. இன்று வரை அந்த மருத்துவமனை வரவும் இல்லை!

மதுரை மாநகருக்கான மெட்ரோ ரயில் போக்கு வரத்தையும் ஒன்றிய அரசு தர மறுத்து விட்டது! எனவே மக்களின் கல்வி, உடல் நலம், தொழில் எவை குறித்தும் கவலைப்படாத சில கட்சிகள், கார்த்திகையன்று எங்கே விளக்கேற்றுவது என்பதில் பல சிக்கல்களை உருவாக்க முயல்கின்றன.

இவ்வாறு மதத்தின் அடிப்படையில் கலவரத்தை உருவாக்க முயற்சி செய்யும் அமைப்புகளைக் கண்டித்து, "திருப்பரங்குன்றம் அடுத்த அயோத்தியா?" என்னும் தலைப்பில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில், 7.12.25 காலை 10 மணிக்கு, சென்னை, சிம்சன் அருகில் உள்ள சிவானந்தா சாலையில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது!

தோழர் சுபவீ தலைமையில் நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தைத் தி.மு.க மாவட்டச் செயலாளர்






நே. சிற்றரசு தொடக்கி வைத்தார். நக்கீரன் கோபால், இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் லெனின் உள்ளிட்ட பலர் கண்டன உரை ஆற்றினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், ஒரு பக்கச் சார்பாகவே தீர்ப்புகளை வழங்கி வரும் மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி திருமிகு ஜி .ஆர் . சுவாமிநாதன் அவர்களின் மீது நாடாளுமன்றத்தில் குற்ற முன்மொழிவுத் தீர்மானம் (impeachment) கொண்டுவரப்பட வேண்டும் என்னும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது !

## திருப்பரன்குன்றத்தில்

# முயன்றார்கள் காவிகள், முடித்துவைத்தார் முதலமைச்சர்!

எழில்.இளங்கோவன்

கடந்த 3 ஆம் நாள் திருவண்ணா மலையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் மக்கள் "அண்ணாமலையாருக்கு அரோகரா" என்ற முழக்கத்தோடு கூட்டம் கூட்டமாக அலைமோதினார்கள், அமைதியுடன்.



அதேநாளில் மதுரை திருப்பரன்குன்றம் முருகன் கோயிலில் "பாரத் மாத்தாகி ஜே" என்று 'இந்தி'யில் காவிகள் சிலர் கூச்சலிட்டார்களே தவிர, "முருகனுக்கு அரோகரா" என்ற தமிழின் முழக்கத்தைத் தமிழ்க்கடவுளின் குன்றத்தில் கேட்க முடியவில்லை, கலவரம் உருவாக்கப் பட்டது. இவர்களிடம் காணப்பட்டது பக்தியல்ல, மதம்.

மதம் வேறு அரசியல் வேறு என்று பிரித்துப் பார்க்கும்வரை அமைதி நிலவும். இரண்டையும் ஒன்றுசேர்க்கும் அரசியலில் மதவெறி துளிர்க்கும், கலவரம் வெடிக்கும் என்பதற்குச் சான்றாக நிற்கிறது, 1992 டிசம்பர் 8, அயோத்திச் சம்பவம்.



தமிழ்நாட்டிலும் அப்படியொரு சம்பவத்தை நிகழ்த்திக் காட்ட பாஜக முயல்வதாகத் தெரிகிறது. அயோத்தியில் பாபர் மசூதி, திருப்பரன்குன்றத்தில் சிக்கந்தர் தர்கா. ஆகவே காவடி எடுக்க வைக்கப்பட்டார் எல்.முருகன். இப்போது கலவரத்திற்கு முனைகின்றன இந்து முன்னணி போன்றவைகளை முன்வைத்து, பாஜக.

கடந்த கார்த்திகை நாளன்று திருப்பரன்குன்றம் மலையுச்சியில் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற இந்து அமைப்பினர் அடம்பிடித்தக் கோரிக்கையை ஏற்ற நீதிபதி சாமிநாதன் அவர்கள், அதற்குக் காவல்துறை பாதுகாப்பு அளிக்கும்படியும் உத்தரவிட்டு இருந்தார். இங்கு கவனிக்க வேண்டிய செய்தி அந்த இடம் இஸ்லாமியரின் சிக்கந்தர் தர்காவுக்கு அருகாமையில் அமைந்துள்ள இடம். நிலைமையின் சிக்கலை உணர்ந்த கோயில் நிர்வாகம், வழக்கம்போல குன்றின் மேலே உள்ள உச்சிப்பிள்ளையார் கோயில் அருகில் தீபத்தை ஏற்றியது.

பாஜக, இந்து முன்னணியைச் சேர்ந்த சிலர் காவல் துறையினருடன் மோதலில் இறங்கி தடுப்புகளைத் தாண்டி மலைமேல்செல்ல முயன்றபோது "பாரத் மாத்தாகீ ஜே" என்று பலமாக அரசியல் கோஷத்தை இந்தியில் கூச்சலிட்டுக் கலவரச் சூழலை உருவாக்கினார்கள். ஆனால் அங்கிருந்த காவல்துறையினர் அந்தப் பகுதியில் விதிக்கப்பட்டிருந்த 144

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

# தலைதூக்கும் சர்வாதிகாரம்

நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்னர், நாடாளுமன்றம் சுமுகமாக நடைபெற அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கூறியிருந்தார் பிரதமர் மோடி. வழக்கமாக ஆளும் பாஜக தான் அவை நடைபெற ஒத்துழைக்காது என்பது ஊருக்கே தெரிந்த சங்கதி. இதோ, நாடாளுமன்றம் தொடங்கியவுடனே பாஜக தன்வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டது.

நாட்டில்விவாதிக்கவேண்டியபல்வேறுபிரச்சனைகள் இருக்கிறது என்றாலும், மிக முக்கியமாக SIR என்று அழைக்கப்படும் வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் என்பது நாடாளுமன்றத்தில் முதலில் விவாதிக்கப் படவேண்டிய ஒன்று. மனிதன் குழந்தையாகப் பள்ளியில் சேர்ந்ததில் இருந்து, சுடுகாட்டுக்குப் போவது வரையும் ஆதார் அட்டையைச் சான்றாகக் காட்டவேண்டி இருக்கிறது. ஆனால் தேர்தல் ஆணையம் மட்டும் ஆதாரைச் சான்றாக ஏற்க மாட்டாதாம்.

பீகாரில் SIR மூலம் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டார்கள். நீதிமன்றத் தலையீட்டால் அது 47 லட்சம் ஆயிற்று. அதற்கான விளக்கத்தைத் தேர்தல் ஆணையம் தரவில்லை.

இப்பொழுது SIR பணியில் பல்வேறு குழப்பங்கள். தேர்தலுக்குஇன்னும்சிலமாதங்களேஇருக்கும்நிலையில் 6.5 கோடி மக்களின் வாக்குகளை 30 நாள்களுக்குள் உறுதிசெய்ய வேண்டும் என்கிறது தேர்தல் ஆணையம்.

ஆணையம் தரும் பதிவு விண்ணப்பத்திலேயே ஏகப்பட்டக்குழப்பம்.இதில்வேலைப்பழுவும்அடங்கும், சிலர் தற்கொலையும் செய்துகொண்டார்கள்.



இதுமக்களின்குடியுரிமைபற்றியபிரச்சனைஎன்பதால் இது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப் பட வேண்டிய ஒன்று. அப்படி விவாதிக்க எதிர்கட்சிகள் சொன்னால், அதை ஏற்கமறுப்பது ஜனநாயகப்படுகொலையாகும். நாடாளுமன்றம் மக்களுக்கானது. அவைகளை அங்கே விவாதிக்க விடவில்லை என்றால் வேறு எங்குதான் போய் . விவாதிப்பது?

எதிர்கட்சிகளின் தீவிர நெருக்கடியின் பின்னர் SIR குறித்து 9ஆம் தேதி விவாதிக்கலாம் என்கிறார் ஆளும்கட்சியின் அமைச்சர் ஒருவர்.எதிர்கட்சிகளின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. மாறாக நாடாளுமன்றம் சுமுகமாக நடைபெற பாஜக வழிவிடுவதும் இல்லை.

சுருக்கமாகச்சொன்னால்சர்வாதிகாரம்தலைதூக்கிக் கொண்டு இருக்கிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

தடையுத்தரவைக் காட்டி நிதானமாகவும், திறமையாகவும் யாரையும் மலைமேல் செல்லவிடாமல் தடைசெய்து விட்டார்கள். நீதிபதி சாமிநாதன் உத்தரவுக்குத் தடை கோரி கோயில் நிர்வாகம், விரைவாக மேல்முறையீடு செய்ததும், மாவட்ட ஆட்சியரின் 144 தடையுத்தரவாலும், காவல்துறையின் நேர்மையான, நிதானமான, விரைவான நடவடிக்கைகளாலும் நிகழவிருந்த கலவரம் தடுத்து நிறுத்தப்பட்டது. திருவண்ணாமலையில் இருந்த அமைதியை, திருப்பரன் குன்றத்திலும் நிலைநிறுத்திக் காட்டினார் நம் முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என்று சொன்ன முதலமைச்சர், தலைநிமிரச் செய்துவிட்டார், திருப்பரன் குன்றத்தில்.

"திருபரங்குன்றத்தில் நீ சிரித்தால் - முருகா, ஸ்டாலின் குரலெங்கும் எதிரொலிக்கும்" சொல்லிவிடு முருகா, காவிகளிடம்! ●

# "மொழியால் தமிழர்கள் இனத்தால் திராவிடர்கள்" அன்றே சொன்னார் கலைஞர்!

## துணைமுதல்வர் உதயநிதி பேச்சு!



இந்தக் காலத்தில் திராவிடம் என்கிற பெயரைக் கேட்டாலே, டெல்லியில் இருந்து பல உருட்டல், மிரட்டல்கள் எல்லாம் வரும்.

சிலர் அவதூறுகளையும், வன்மங்களையும் பரப்புவார்கள். ஆனால், இதற்கெல்லாம் கலைஞர் அப்போதே பதில் சொல்லிவிட்டார் "ஆம் நாங்கள் மொழியால் தமிழர்கள், இனத்தால் திராவிடர்கள், நாட்டினால் இந்தியர்கள்" என்று. நம்முடைய இனமானப் பேராசிரியர், மொழி உணர்வு மட்டும் இருப்பவன் தமிழன் என்றும், மொழி உணர்ச்சியோடு சேர்த்து மான உணர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் இருந்தால் அவன்தான் திராவிடன் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிடம் என்பதைக் கலைஞரோ, அண்ணாவோ முதல் முதலாக பயன்படுத்தவில்லை. 1856 இல் கால்டுவெல் அவர்கள் தென்னிந்திய மொழிகளை ஆய்வு செய்து, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில்தான் திராவிடம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆரியர் என்பவர் யார்? திராவிடர் என்பவர் யார்? இரண்டும் வெவ்வேறு இனத்தை குறிக்கும் வார்த்தை என்று கால்டுவெல் விளக்கம் அளித்துள்ளார்.



இவ்வளவு தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டு இருந்தாலும் சங்கிகள் திராவிடம் குறித்து அவதூறுகளைப் பரப்பி வருகிறார்கள். முன்பெல்லாம் லோக்கல் சங்கிகள்தான் இந்த அவதூறுகளைப் பரப்பி வந்தார்கள். இன்று ஆளுநரே இதை நேரடியாக செய்ய தொடங்கியிருக்கிறார்.

மறுபுறம் திராவிடம் பற்றித் தனக்கு ஏதும் தெரியாது என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறார். தன்னுடையக் கட்சியிலேயே திராவிடத்தை வைத்துக்கொண்டு அதைப் பற்றி எதுவும் தெரியாது என்று அவர் கூறியிருக்கிறார். திராவிடத்தை மட்டுமல்ல அவர் எம்ஜிஆரை, அண்ணாவையும் கூட மறந்து விட்டார். அவருடைய மனதில் இருப்பது எம்ஜிஆரோ, அண்ணாவோ, முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவோ கிடையாது. அவருடைய மனதில் முழுக்க நிறைந்து இருப்பது அமித்ஷா மட்டும்தான்.

அதிமுகவில் அமித்ஷாவுக்கு சேவகம் செய்ய பலர் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றனர். வங்கிகளை எடுத்துக் கொண்டால் அதற்குப்பல கிளைகள் இருக்கும். ஈரோடு, மதுரை, நெல்லை, கோவை என கிளைகள் பல இருக்கும். அதனுடைய தலைமை அலுவலகம் டெல்லியில் இருக்கும். டெல்லியில் இருந்து இந்த கிளைகள் வழிநடத்தப்படும், கட்டுப்படுத்தப்படும். இன்றைக்கு அது போல தமிழ்நாட்டில் அதிமுக உட்பட பல கட்சிகளுக்கு டெல்லியில் இருக்கக்கூடிய அமித்ஷா வீடுதான் தலைமை அலுவலகமாக இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் பல கார்கள் மாறிச் சென்று அமித்ஷாவைச் சந்தித்து இருந்தார் எடப்பாடி பழனிசாமி. அதேபோல இதே பகுதியை சேர்ந்த அதிமுக முன்னாள் மூத்த அமைச்சர், ஹரிதுவார் செல்கிறேன், ஆன்மீக பயணம் செல்கிறேன் என்று போய் அமித்ஷாவை சந்தித்து விட்டு வந்திருக்கிறார். அதன் பின்னர் மற்றொரு கட்சியில் இணைந்து இருக்கிறார். அதிமுகவில் இருக்கக்கூடிய மூத்த தலைவர்கள் வேறு கட்சியில் இணைவதாக இருந்தால் கூட டெல்லிக்குச் சென்று அமித்ஷாவிடம் அனுமதி வாங்கிவிட்டுத்தான் வர வேண்டும். அந்த வகையில் தற்போது அவர் இணைந்திருப்பது மாற்றுக் கட்சியில் அல்ல, மாற்று கிளையில்.

**(ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில் 1-12-2025 அன்று 'புதிய திராவிட கழகத்தின் 6ஆம் ஆண்டு மாநாட்டில் துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேச்சின் ஒரு பகுதி)** ●

**Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian**